**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.254/2015</u>**

பெயர்–திரு. நஞ்சையன் நாள்.02.02.2026

**பி.வா.சா.1** ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**1)** பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் க.ச.எண்.172/4, 172/6, 335/2, 340/5, 347/6, 340/8 ஆகிய பூமிகள் பூர்விக சொத்துக்களா என்றால், க.ச.எண்.172/6, 172/4–பூமிகளைத் தவிர மற்ற பூமிகள் பூர்விக சொத்துக்கள் ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1–ம் வாதியும், அவரது அம்மாவும் எழுதிக் கொடுத்த பத்திரத்தில் க.ச.எண்.172/6, 172/4 பூமிகள் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி க.ச.எண்.172/6, 172/4 சொத்துக்களானது பூர்விக சொத்துக்கள் என்பதால்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. க.ச.எண்.172/4, 172/6 பூமிகள் எனது தந்தை கெம்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். க.ச.எண்.347/6 பூர்விக சொத்துக்கள் என்றால், சரிதான். க.ச.எண்.347/6 சொத்தை எனது தந்தையும், 1–ம் வாதியின் தகப்பனார் நஞ்சப்பகவுண்டரும் கூட்டாக அனுபவத்து வந்தார்கள் என்றால், சரிதான். க.ச.எண்.347/6 குறித்து பி.வா.சா.ஆ.1 பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். க.ச.எண்.347/6–ல் எங்களுக்கு பூமியில்லை. பி.வா.சா.ஆ.1 பாகபாத்திய ஆவணத்தில் சொல்லப்பட்ட சொத்துக்களிலும், க.ச.எண்.347/6 பூமியிலும் வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

**2)** நான் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்த சமயத்தில் பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5 ஆவணங்களைத் தவிர மற்ற ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், தற்போதுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி மற்ற ஆவணங்களை வழக்கிற்காக தற்போது தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 2015–ல் வாதி அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகுதான், நான் எனது தந்தையின் பெயரில் வருவாய் துறையில் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1

ஆவணத்தில் 1–ம் வாதியும், அவரது தாயாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இன்றுவரை வாதிதான் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றாலும், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் போலியானது, செல்லாதது என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.02 18:09:27 +0530

District Munsif